**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், ஆவணி மாதம் 5 ம் நாள்

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண். 10/2025**

C.N.R.No. TNCB17-000010-2025

ஆர்.பாத்திமா @ புவனேஸ்வரி ... **வாதி**

// எதிர்//

ரஹ்மான் @ அப்துல் ரஹ்மான் ...**பிரதிவாதி**

இந்த வழக்கானது இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.முகமது யாகூப், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஈரோடு - 638003, புதிய மசூதி தெருவில் உள்ள நதுவத்துல் உலமா அறக்கட்டளையில் வைத்து 01.03.2015 ம் தேதியன்று இஸ்லாம் முறைப்படி நடைபெற்ற திருமணம் இல்லா நிலையது என்று விளம்புகை பரிகாரம் கோரியும் தாவா செலவுத் தொகை கோரி வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வழக்குரையின் சுருக்கம்** :-

1.1). வாதிக்கு சொந்த ஊர் தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குள்ம் ஆகும். வாதி கோயம்புத்தூர், சித்ரா பகுதியில் அரவிந்த கண் மருத்துவமனையில் MLOP

(Mid-Level Ophthalmic Personnel) படித்து வந்த போது பிரதிவாதி அறிமுகமாகி நட்பாக பேசி, காதலித்து வந்தனர். வாதி இந்து மதத்தை சேர்ந்தவர் என்பதாலும், பிரதிவாதி இஸ்லாம் மதத்தை சேர்ந்தவர் என்பதாலும் இருவர் வீட்டிலும் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அதனை தொடர்ந்து பிரதிவாதி வாதியை அழைத்துக்கொண்டு ஈரோடு மாவட்டம், பவானியில் உள்ள பெற்றோர் வீட்டிற்கு வந்தார். வாதி இஸ்லாம் மதம் மாற பிரதிவாதி பெற்றோர் மற்றும் உறவினர்கள் கொடுத்த நிர்பந்தத்தின் பேரில் ஒப்புக்கொண்டார். அதனை தொடர்ந்து 25.02.2015 ம் தேதியன்று வாதி இஸ்லாம் மதத்தை ஏற்று தனது இயர் பெயரான புவனேஸ்வரி என்பதை பாத்திமா என மாற்றி நோட்டரி வழக்கறிஞர் மூலம் பிரமாணப்பத்திரம் தயாரித்து அதனை வைத்து ஈரோடு மாவட்டம் பிரதிவாதியின் நதுவத்துல் உலமா அறக்கட்டளையில் வைத்து 01.03.2015 ம் தேதி இஸ்லாம் முறைப்படி வாதிக்கும், பிரதிவாதிக்கும் திருமணம் நடைபெற்றது.

1.2). வாதியின் குடும்பத்தார் இத்திருமணத்திற்கு ஆதரவு கொடுக்காத காரணத்தினால், பிரதிவாதியின் நெருங்கிய உறவினர்கள் முன்னிலையில் இத்திருமணம் நடைப்பெற்ற காரணத்தினால் திருமண பத்திரிக்கை அச்சடிக்கவில்லை. திருமணத்திற்கு பின்னர் வாதியும், பிரதிவாதியும் ஈரோடு மாவட்டம், பவானியில் பிரதிவாதியின் வீட்டில் இல்லற வாழ்க்கையினை தொடங்கினர். இந்நிலையில் பிரதிவாதிக்கு ஏற்கனவே திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள் என்பதை வாதி, பிரதிவாதியின் உறவினர்கள் மூலமாக தொரிந்து கொண்டார். மேலும் பிரதிவாதி மது அருந்துவது, பாக்கு போடுவது, சிகரெட் புகைப்பது போன்ற பல தீயப்பழக்கத்திற்கு அடிமையாக இருப்பதை வாதி தெரிந்துகொண்டார்.

1.3). வாதி திருமணமான நாள் முதல் உடலளவிலும், மனதளவிலும் பிரதிவாதி மூலம் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்துள்ளார். வாதி கர்ப்பமடைந்ததை

தொடர்ந்து வாதிக்கு கடுமையான உடல் உபாதைகள் ஏற்பட்டது. வாதிக்கு தேவைப்பட்ட மருந்து பொருள்களையோ, பிற அவசியமான பொருள்களையோ பிரதிவாதி வாங்கி கொடுக்காமலும், வேலைக்கு சரியாக செல்லாமலும் தொடர்ந்து பிரதிவாதி அலட்சியமாக இருந்து வாந்தார். வாதிக்கு 30.12.2015 ம் தேதியன்று ஈரோடு மாவட்டம் அரசு மருத்துவமனையில் வைத்து முதல் பெண் குழந்தை பிறந்தது. வாதி குழந்தையுடன் என்ன செய்வது என்று அறியாமல் நெருக்கடியில் இருந்து வந்தார். இந்நிலையில் வாதிக்கு 07.03.2017 ம் தேதியன்று ஈரோடு மாவட்டம் பவானி அரசு மருத்துவமனையில் வைத்து இரண்டாவது பெண் குழந்தை பிறந்தது. பிரதிவாதி வாதியின் கணவர் என்ற பொறுப்பிலிருந்தும், குழந்தையின் தந்தை என்ற பொறுப்பிலிருந்தும் எந்தவித உதவிகளும் செய்யாமல் வழக்கம் போல மிகவும் அலட்சியமாக வாழ்ந்து வந்தார்.

1.4). பிரதிவாதி குடித்துவிட்டு வந்து தொடர்ந்து வாதியை அடித்து கொடுமைப்படுத்தி வந்ததை தொடர்ந்து வாதி மனவுளைச்சலுக்கு உள்ளானார். இதனால் வாதி தனது பெற்றோர் சம்பாத்தியத்தில் இருந்து வாதிக்கும், குழந்தைகளுக்கும் தேவையான அனைத்து அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்து வந்தார். பிரதிவாதியின் நோக்கம் குடும்ப பொறுப்பேற்று சரியாக வேலைக்கு சென்று முறைப்படி பணம் சம்பாதிக்காமல் வாதியின் பெற்றோரிடமிருந்து பணம் பறிப்பதாக மட்டுமே இருந்தது. பிரதிவாதி வேலைக்கு சென்று வந்த இடத்தில் ஏற்கனவே திருமணமான மற்றொரு பெண்ணோடு தொடர்பில் இருப்பது வாதிக்கு குடும்ப உறவினர்கள் மூலமாக தெரிய வந்தது. இதனை பற்றி வாதி பிரதிவாதியிடம் கேட்ட போது கடந்த 2019, டிசம்பர் மாதம் பிரதிவாதி குடித்துவிட்டு வந்து வாதியையும் இரண்டு குழந்தைகளையும் அடித்து வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டார். அதன் பின் வாதி கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தாலூக்கா, சின்னியம்பாளையம் கிராமத்தில் தம்ப விக்னேஷ் வீட்டில் வசித்து வருகிறார்.

1.5). பிரதிவாதி மது அருந்திவிட்டு வாதியின் சகோதரர் வீட்டுக்கு வந்து வாதியை தாக்கி கடுமையாக பிரச்சினை செய்து சென்றார். இதனை தொடர்ந்து வாதி பிரதிவாதியின் பள்ளி வாசலில் வாய்மொழி புகார் கொடுத்து பள்ளிவாசல் நிர்வாகிகள் பிரதிவாதியை அழைத்து எச்சரித்து அறிவுரை வழங்கிய பின்னரும் கூட பிரதிவாதி கேட்காமல் தொடர்ந்து மிகவும் மோசமாகவே நடந்துவருகிறார். பலமுறை பிரதிவாதிக்கு குடும்ப பெரியோர்கள், உறவினர்கள் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகிகள் அறிவுரை கூறியும் அதனை எதையுமே ஏற்காமல் அலட்சியமாக வாழ்ந்து வருகிறார். எனவே வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையேயான திருமணத்தை இரத்து செய்து பரிகாரம் கோரி இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார்.

2). பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் பிரதிவாதி தோன்றாதரப்பினராக ஒருதலைபட்சம் ஆக்கப்பட்டுள்ளார்.

3). வாதி தரப்பில் வாதி பாத்திமா வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு வாதி கணவர் மற்றும் குழந்தைகளுடன் எடுத்து கொண்ட புகைப்படம் வா.சா.ஆ.1 ஆகவும், வாதி இஸ்லாம் மதத்திற்கு மாறியதற்கான நோட்டரி பதிவு பிரமான வாக்குமூலம் வா.சா.ஆ.2 ஆகவும், நதுவத்துல் உலமா அறக்கட்டளை வழங்கிய திருமண உடன்படிக்கை வா.சா.ஆ.3 ஆகவும், வாதியின் வாக்காளர் அடையாள அட்டை வா.சா.ஆ.4 ஆகவும், முதல் குழந்தையின் பிறப்பு சான்றிதழ் வா.சா.ஆ-5 ஆகவும், 2ம் குழந்தையின் பிறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

**4. வாதி வழக்குரையில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்று தீர்மானம் செய்யவேண்டியுள்ளது.**

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101-ன்படி தரப்பினர் எவர் ஒருவர் தனது சட்டப்படியான உரிமை அல்லது பொறுப்பு குறித்து தான் கூறும் சங்கதியை

நீதிமன்றம் ஏற்று தீர்ப்பு வழங்கவேண்டும் என்ற சங்கதியை முன் வைக்கின்றாரோ, அந்தநபரே அந்த சங்கதியை மெய்ப்பிக்கவேண்டியதாகும்.

**<u>5. வாதி தரப்பு வாதம் :-</u>**

5.1). கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் வாதத்தின்போது, வாதிக்கு சொந்த ஊர் தூத்துக்குடி மாவட்டம், வாதி கோயம்புத்தூர், சித்ரா பகுதியில் அரவிந்த கண் மருத்துவமனையில் MLOP (Mid-Level Ophthalmic Personnel) படித்து வந்த போது பிரதிவாதி அறிமுகமாகி காதலித்து வந்தனர். வாதி இந்து மதத்தை சேர்ந்தவர், பிரதிவாதி இஸ்லாம் மதத்தை சேர்ந்தவர் எனவே இருவர் வீட்டிலும் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே பிரதிவாதி வாதியை அழைத்துக்கொண்டு ஈரோடு மாவட்டம், பவானியில் உள்ள பெற்றோர் வீட்டிற்கு சென்றார். வாதி இஸ்லாம் மதம் மாற பிரதிவாதி பெற்றோர் மற்றும் உறவினர்கள் கொடுத்த நிர்பந்தத்தின் பேரில் ஒப்புக்கொண்டார். அதனை தொடர்ந்து 25.02.2015 ம் தேதியன்று வாதி இஸ்லாம் மதத்தை ஏற்று தனது இயர் பெயரான புவனேஸ்வரி என்பதை பாத்திமா என மாற்றி நோட்டரி வழக்கறிஞர் மூலம் பிரமாணப்பத்திரம் தயாரித்து அதனை வைத்து ஈரோடு மாவட்டம் பிரதிவாதியின் நதுவத்துல் உலமா அறக்கட்டளையில் வைத்து 01.03.2015 ம் தேதி இஸ்லாம் முறைப்படி வாதிக்கும், பிரதிவாதிக்கும் திருமணம் நடைபெற்றது.

5.2). வாதியின் குடும்பத்தார் இத்திருமணத்திற்கு ஆதரவு கொடுக்காத காரணத்தினால், பிரதிவாதியின் நெருங்கிய உறவினர்கள் முன்னிலையில் இத்திருமணம் நடைப்பெற்றது. திருமணத்திற்கு பின்னர் வாதியும், பிரதிவாதியும் ஈரோடு மாவட்டம், பவானியில் பிரதிவாதியின் வீட்டில் இல்லற வாழ்க்கையினை தொடங்கினர். இந்நிலையில் பிரதிவாதிக்கு ஏற்கனவே திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள் என்பதை வாதி, பிரதிவாதியின் உறவினர்கள் மூலமாக தொரிந்து கொண்டார். மேலும் பிரதிவாதி மது அருந்துவது, பாக்கு போடுவது, சிகரெட் புகைப்பது போன்ற பல தீயப்பழக்கத்திற்கு அடிமையாக இருப்பதை வாதி

தெரிந்துகொண்டார். வாதி திருமணமான நாள் முதல் உடலளவிலும், மனதளவிலும் பிரதிவாதி மூலம் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்துள்ளார். வாதி கர்ப்பமடைந்ததை தொடர்ந்து வாதிக்கு தேவைப்பட்ட மருந்து பொருள்களையோ, பிற அவசியமான பொருள்களையோ பிரதிவாதி வாங்கி கொடுக்காமலும், வேலைக்கு சரியாக செல்லாமலும் தொடர்ந்து பிரதிவாதி அலட்சியமாக இருந்து வாந்தார். வாதிக்கு 30.12.2015 ம் தேதியன்று ஈரோடு மாவட்டம் அரசு மருத்துவமனையில் வைத்து முதல் பெண் குழந்தை பிறந்தது. வாதி குழந்தையுடன் என்ன செய்வது என்று அறியாமல் நெருக்கடியில் இருந்து வந்தார். இந்நிலையில் வாதிக்கு 07.03.2017 ம் தேதியன்று ஈரோடு மாவட்டம் பவானி அரசு மருத்துவமனையில் இரண்டாவது பெண் குழந்தை பிறந்தது. பிரதிவாதி வாதியின் கணவர் என்ற பொறுப்பிலிருந்தும், குழந்தையின் தந்தை என்ற பொறுப்பிலிருந்தும் எந்தவித உதவிகளும் செய்யாமல் வழக்கம் போல மிகவும் அலட்சியமாக வாழ்ந்து வந்தார்.

5.3). இதனால் வாதி தனது பெற்றோர் சம்பாத்தியத்தில் இருந்து வாதிக்கும், குழந்தைகளுக்கும் தேவையான அனைத்து அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்து வந்தார். பிரதிவாதியின் நோக்கம் சரியாக வேலைக்கு சென்று முறைப்படி பணம் சம்பாதிக்காமல் வாதியின் பெற்றோரிடமிருந்து பணம் பறிப்பதாக மட்டுமே இருந்தது. பிரதிவாதி வேலைக்கு சென்று வந்த இடத்தில் ஏற்கனவே திருமணமான மற்றொரு பெண்ணோடு தொடர்பில் இருப்பது வாதிக்கு தெரியவந்து பிரதிவாதியிடம் கேட்ட போது கடந்த 2019, டிசம்பர் மாதம் பிரதிவாதி குடித்துவிட்டு வந்து வாதியையும் இரண்டு குழந்தைகளையும் அடித்து வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டார். அதன் பின் வாதி கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தாலூக்கா, சின்னியம்பாளையம் கிராமத்தில் தம்பி விக்னேஷ் வீட்டில் வசித்து வருகிறார்.

5.4). பிரதிவாதி மது அருந்திவிட்டு வாதியின் சகோதரர் வீட்டுக்கு வந்து வாதியை தாக்கி கடுமையாக பிரச்சினை செய்து சென்றார். இதனை தொடர்ந்து வாதி

பிரதிவாதியின் பள்ளி வாசலில் வாய்மொழி புகார் கொடுத்து பள்ளிவாசல் நிர்வாகிகள் பிரதிவாதியை அழைத்து எச்சரித்து அறிவுரை வழங்கிய பின்னரும் கூட பிரதிவாதி கேட்காமல் தொடர்ந்து மிகவும் மோசமாகவே நடந்துவருகிறார். பலமுறை பிரதிவாதிக்கு குடும்ப பெரியோர்கள், உறவினர்கள் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகிகள் அறிவுரை கூறியும் அதனை எதையுமே ஏற்காமல் அலட்சியமாக வாழ்ந்து வருகிறார். எனவே வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையேயான திருமணத்தை இரத்து செய்யுமாறு இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார். வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என வாதிடப்பட்டது.

<u>6. தீர்வு :</u>

6.1). வாதி தரப்பு கேட்கப்பட்டது, வழக்குரை, சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கில் வாதி கோரிய பரிகாரம் வாதி தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலனை செய்கையில் வா.சா.ஆ.1 ஆக வாதி கணவர் மற்றும் குழந்தைகளுடன் எடுத்துக் கொண்ட புகைப்படம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 புகைப்படத்தை பரிசீலனை செய்கையில் வாதிக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

6.2). வா.சா.ஆ.2 ஆக வாதி இஸ்லாம் மதத்திற்கு மாறியதற்கான நோட்டரி பதிவு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 பிரமாண வாக்குமூலத்தை பரிசீலனை செய்கையில் "நான் இந்து மதத்தை சார்ந்தவள். நான் சில காலமாக குரானைப் படித்து, அதில் உள்ள கருத்துகளால் ஈர்க்கப்பட்டு இஸ்லாமிய கோட்பாடுகளை அறிந்துள்ளேன். இஸ்லாமிய சமயத்தின் பல்வேறு அம்சங்களைப் பற்றி நீண்ட நாட்களாய் தியானித்து வருகிறேன்” என்றும், “இஸ்லாமியராக மாற வேண்டுமென்கிற என் முடிவு என் முழு மன விருப்பத்தோடு, சுயமாகச் சிந்தித்து எடுக்கப்பட்ட முடிவு" என்றும் சொல்லப்பட்டுள்ளது. எனவே வாதி இந்து மதத்திலிருந்து

இஸ்லாம் மதத்திற்கு மாறியுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

6.3). வா.சா.ஆ.3 அக நதுவத்துல் உலமா அறக்கட்டளை வழங்கிய வாதி திருமண உடன்படிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் வாதிக்கும், பிரதிவாதிக்கும் 01.03.2015 ம் ஆண்டு நதுவத்துல் உலமா அறக்கட்டளையில் திருமணம் நடந்துள்ளது என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.4 ஆக வாதியின் வாக்காளர் அடையாள அட்டை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 வாக்காளர் அடையாள அட்டையை பரிசீலனை செய்கையில் அதில் வாதியின் பெயர் பாத்திமா என்றும், கணவர் பெயர் ரஹ்மான் என்றும் உள்ளது என்பதை அறியமுடிகிறது.

6.4). வா.சா.ஆ.5 ஆக வாதியின் முதல் குழந்தை மெஹருன் நிஷாவின் பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.5 பிறப்பு சான்றிதழை பரிசீலனை செய்கையில் வாதிக்கும் பிரதிவாதிக்கும் 30.12.2015 ம் தேதி ஈரோடு அரசு மருத்துவமனையில் வைத்து மெஹருன் நிஷா என்ற பெண் குழந்தை பிறந்துள்ளது என்பதை அறியமுடிகிறது. வா.சா.ஆ.6 ஆக வாதியின் இரண்டாம் குழந்தை யாஸ்மின் ஹமீதாவின் பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.6 பிறப்பு சான்றிதழை பரிசீலனை செய்கையில் வாதிக்கும் பிரதிவாதிக்கும் 07.03.2017 ம் தேதி பவானி அரசு மருத்துவமனையில் வைத்து யாஸ்மின் ஹமீதா என்ற பெண் குழந்தை பிறந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

6.5). மேற்கண்ட பரிசீலனையில் இருந்து வாதிக்கும், பிரதிவாதிக்கும் மேற்கண்டவாறு திருமணம் நடைபெற்றதும், அது சம்பந்தமாக வாதி இஸ்லாம் மதத்திற்கு மாறியதாகவும் பின்னிட்டு வா.சா.ஆ.3 திருமண உடன்படிக்கை ஆவணம் மூலமாக நதுவத்துல் உலமா அறக்கட்டளை சார்பாக திருமண உடன்படிக்கையின் மூலமாக வாதிக்கும் பிரதிவாதிக்கும் திருமணம் நடைபெற்று உள்ளது என்பதும் திருமணத்தின் பயனாக இரண்டு பெண் குழந்தைகள் பிறந்துள்ளனர் என்பதும் வா.சா.ஆ.5 மற்றும்

வா.சா.ஆ.6 ஆவணங்களின் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட திருமணமானது இஸ்லாமிய சட்டமுறைப்படி இருவருக்கும் ஏற்பட்ட திருமணத்தை ரத்து செய்யும் வகையில் தலாக்கோ அல்லது "குலா" போ இஸ்லாமிய மத வழக்கப்படி வாதி பிரதிவாதிக்கு இடையே ஏற்பட்ட திருமணம் செல்லாது என உடன்படிக்கை பத்திரம் எதுவும் ஏற்படவில்லை.

6.6). எனவே வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஈரோடு - 638003, புதிய மசூதி தெருவில் உள்ள நதுவத்துல் உலமா அறக்கட்டளையில் வைத்து 01.03.2015 ம் தேதியன்று இஸ்லாம் முறைப்படி நடைபெற்ற திருமணம் இல்லா நிலையது என வாதி கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**7). முடிவாக,**

வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஈரோடு - 638003, புதிய மசூதி தெருவில் உள்ள நதுவத்துல் உலமா அறக்கட்டளையில் வைத்து 01.03.2015 ம் தேதியன்று இஸ்லாம் முறைப்படி நடைபெற்ற திருமணம் இல்லா நிலையது என வாதி கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**தூலார்.**

**சாட்சி மற்றும் சான்றாவணப் பட்டியல்:**

**வாதி தரப்பு சாட்சி:**

வா.சா.1 - பாத்திமா

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| ஆவண. எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | --- | வாதி கணவர் மற்றும் குழந்தைகளுடன் எடுத்து கொண்ட புகைப்படம் | அசல் |
| வா.சா.ஆ.2 | --- | வாதி இஸ்லாம் மதத்திற்கு மாறியதற்கான நோட்டரி பதிவு பிரமாண வாக்கு மூலம் | அசல் |
| வா.சா.ஆ.3 | 01.03.2015 | நதுவத்துல் உலமா அறக்கட்டளை வழங்கிய வாதி மற்றும் பிரதிவாதியின் திருமண உடன்படிக்கை | அசல் |
| வா.சா.ஆ.4 | --- | வாதியின் வாக்காளர் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. | நகல் |
| வா.சா.ஆ.5 | 31.12.2015 | வாதி முதல் குழந்தையின் பிறப்பு சான்றிதழ் | நகல் |
| வா.சா.ஆ.6 | 07.03.2017 | வாதி 2 ம் குழந்தையின் பிறப்பு சான்றிதழ் | நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்** : இல்லை

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

சூலூர்

அசல் வழக்கு எண்.10/2025

வரைவு/செவ்வை தீர்ப்புரை

நாள்: 21.08.2025